**O.S.No. 174/2012**

**DW 2: செந்தில்குமார்** தேதி 12.3.2026

பிவாசா 2 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நாச்சிமுத்து கவுண்டரும் ராமாயம்மாளும் என் அப்பாவின் பெற்றோர். மேற்படியார்கள் எனக்கு 24.3.1992 ல் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார்கள். பவளத்தாம்பாளையத்தில் உள்ள ச எண் 33/2 ல் ராமாயம்மாள் எனக்கும் என் அப்பாவிற்கும் எழுதி வைத்தார். அந்த சொத்தை என் தாத்தா நாச்சிமுத்து கவுண்டரும் பாட்டி ராமாயம்மாளும் சேர்ந்து கிரையம் பெற்ற சொத்து என்றால் சரிதான். ராமாயம்மாள் அவருடைய **½** பங்கை பொதுவில் எனக்கும் என் அப்பாவிற்கு எழுதி வைத்தார் என்றால் சரிதான். எங்களுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் செக்குப்பந்தியுடன் **½** பங்கை பொறுத்து எழுதவில்லை என்றால் சரிதான். செக்குப்பந்தியுடன் எழுதவில்லை என்பதால் எங்களுக்கு கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் சரியானது அல்ல என்றால் சரியல்ல. அந்த சொத்தை நானும் என் அப்பாவும் பொதுவில் கண்டு அனுபவித்து வருகிறோம்.